Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**C.C.No.103/2020**

**Deposition of PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ஜெயந்தி | ஜாதி | : |
| க/பெ | : விஜய் ஆனந்த் | தொழில் | : வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | :சோழவந்தான், மதுரை | சமயம் | : |
| தாலுகா | :சோழவந்தான் | வயது | : 45/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.01.2024.

(Accused A1 to A3 absent. U/s.317 Crpc petition filed and allowed.)

முதல் விசாரணை

நான் மதுரை சோழவந்தானில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் புகார் கொடுத்துள்ள அ.சா.1ஐ எனக்கு தெரியும். கடந்த 22.05.2019 அன்று பகல் 11 மணியிலிருந்து 12 மணியளவில் எதிரி பார்திபன் தேவிடியா என்று சொல்லி திட்டி கொண்டிடே வந்தார். உடன் பார்தீபனின் அம்மா சுமதி, அப்பா ராஜாங்கம் ஆகியோர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டே வந்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்பொழுதே விஜயாவை அடித்தார். எதிரி சுமதி விஜயாவை முடியை பிடித்துக்கொண்டார். ராஜாங்கமும் அடிக்க ஆரம்பித்தார். நைட்டியை பிடித்து பார்த்தீபன் இழுத்ததில் நைட்டி கிழிந்தது உடனே விஜயா கீழே உட்கார்ந்து கொண்டார். நான் சத்தம் போட்டவுடன் மகேந்திரன், ரவிக்குமார், கிஷோர் ஆகியோர் அங்கு வந்தார்கள். மகேந்திரன் வீட்டிற்குள் இருந்ததால் உடனடியாக வந்துவிட்டார். ரவிக்குமாரும், கிஷோரும் தோட்டத்தில் இருந்ததால் பின்பு வந்தார்கள். பார்த்திபன் உங்களை ஸ்டேசனில் தூக்கி வைக்கிறேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். பின்பு நைட்டியை மாற்றி கொண்டு விஜயா புகார் கொடுக்க சென்றார். அங்கு சென்றபின்பு தான் ரவிக்குமாரை கைது செய்து விட்டார்கள் என்ற விபரம் தெரியவந்தது. அதன்பின்பு விஜயா அரசு மருத்துவமனைக்கு சென்றார் அவர் தனியாக சென்றதால் தம்பி மகேந்திரனையும் பின்பு அவருக்கு துணையாக இருக்குமாறு சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை அன்று மாலை 3 மணியிலிருந்து 4 மணியளவில் விசாரித்தார்கள். அதன்பின்பு என்னை விசாரிக்கவில்லை. எனது அப்பா பெயர் செல்வராஜ் ஆகும். எனது அப்பாவும், எனது தம்பி மகேந்திரனும் எதிரி மீது சிவில் வழக்கு தாக்கல் செய்தது எனக்கு தெரியும். அந்த வழக்கில் ரவிக்குமாரும், விஜயாவும் தரப்பினராக இருக்கிறார்கள். அந்த வழக்கில் நான் தரப்பினர் கிடையாது என்று சொல்லியிருந்தால் அவர் சொன்னது பொய். விஜயா அடித்து நைட்டியை கிழித்தபின்பு தான் நான் கத்தினேன். அதற்குபின்புதான் என் தம்பி மகேந்திரன் வீட்டிற்குள் இருந்து வந்தார். எனது தகப்பனாருக்கும் எதிரி சுமதிக்கும் சொத்து சம்பந்தமாக சொத்து பிரச்சனை இருந்தது. நடந்த சம்பவத்தில் ராஜாங்கத்திற்கு

காயம் ஏற்பட்ட விபரம் தெரியாது. ராஜாங்கத்தை இரத்த காயத்துடன் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விபரம் எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் கிஷோர் அங்கு இல்லை என்று விஜயா சொல்லியிருந்தால் அது சரிதான். நானும் எனது தம்பியும் எதிரி சுமதி மீதுள்ள சொத்து பிரச்சனையை காரணமாக வைத்து கொண்டு விஜயாவிற்கு ஆதவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிறப்பு சார்பு ஆய்வாளர் சிவக்குமார் என்ற போலீசார் எங்களது உறவினர் ஆவார். ரவிக்குமார், கிஷோர், விஜயா ஆகியோர் சேர்ந்து ராஜாங்கம் என்பவரை கல்லால் தாக்கி தலையில் காயம் ஏற்படுத்தி அவர்கள் மீது ராஜாங்கம் கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக இந்த புகார் கொடுக்கப்பட்டு விஜயாவிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதை போல் எந்த சம்பவமும் எதிரிகள் செய்யவில்லை என்றும், பார்த்திபன் அரசு ஊழியர் என்பதால் அவரை பழிவாங்குவதற்காக விஜயாவிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட பழிவாங்குதலுக்காக மேற்கண்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் சிவக்குமார் என்பவரது உதவியுடன் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

P JAISANKAR

Digitally signed by P JAISANKAR

District Munsif cum Judicial Magistrate,
Athoor.